DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.125/2025

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | சுகண்யா (Lw - 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 17.03.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், கதிரநல்லூர், 7/28, தோப்புபட்டியில் குடியிருந்து சேந்தங்கலம் கனரா வங்கியில் மூத்த மேலாளராக வேலைசெய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். **(**சாட்சி எதிரியை அடையாளம் காட்டினார்**.)** ஆஜர் எதிரி என்னுடன் பள்ளியில் ஒன்றாக படித்தவர் எனக்கு தெரியும். அவர் கடந்த 2020ம் ஆண்டில் இருந்து என்னை திருமணம் செய்துகொள்ள எனது பெற்றோர் மற்றும் என்னிடம் கேட்டு வந்தார். நாங்கள் அதற்கு மறுப்பு தெரிவித்தும் ஆஜர் எதிரி தொடர்ந்து என்னை தொந்தரவு செய்து வந்தார்.

கடந்த 08.10.2024ம் தேதி காலை சுமார் 09.30 மணியளவில் நான் வங்கிக்கு வேலைக்கு சென்றுகொண்டிருந்தபோது அரசமர பேருந்து நிறுத்தத்தில் எதிரி என்னிடம் பேசவேண்டும் என கூறினார். நான் முடியாது என கூறினேன். அப்போது அவர் எனது கையை பிடித்தார். அப்போது அங்கு வந்த எனது வங்கியின் நகை மதிப்பீட்டாளர் மனோஜ்குமார் என்ன நடக்கிரது என கேட்டபோது ஆஜர் எதிரி சேகர் மனோஜ்குமாரை அடித்து பிரச்சணை செய்தார்.

அதற்கு முன்பு 04.10.2024ம் தேதியிலும் வேறு சில நாட்களிலும் ஆஜர் எதிரி நான் வேலை செய்யும் வங்கிக்கு வந்து என்னிடம் பேச வேண்டும் என வங்கிக்கு உள்ளே வந்தார். அங்கு வந்து என்னை திருமணம் செய்துகொள்ளுமாறு தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்தார். நான் முடியாது என தீர்மாணமாக கூறியதற்கு பின்பும் வங்கிக்கு வந்து என்னை தொந்தரவு செய்துகொண்டே இருந்தார். நான் புகார் கொடுப்பதற்கு முன்பு சில நாட்களாக வங்கியில் என்னுடைய கேபினுக்குள் நுழைந்து பிரச்சணை செய்தார். நான் எதற்காக பிரச்சணை செய்கிறீர்கள் என்று கேட்டபோதெல்லாம் ஏன் நான் உங்கள் வங்கியில் கணக்கு தொடங்க கூடாதா என கூறுவார். பின்பு என்னுடன் வங்கியில் பணிபுரியும் அலுவலர்கள் அங்கு வந்து அவரை வெளியே அனுப்புவார்கள். நான் வேலை பார்க்கும் வங்கயில் அவருக்கு எவ்வித பணபரிமாற்றங்களும் இல்லாத நிலையில் பலமுறை எனக்கு அவருடன் பேச விருப்பம் இல்லை என எடுத்துக்கூறியும் வங்கிக்கு வந்து என்னை வேலைபார்க்கவிடாமல் மனஉளைச்சலை ஏற்படுத்திவந்தார். அவரால் எனக்கு தொடர்ச்சியான மன உளைச்சலும், பாதுகாப்பின்மையும் ஏற்பட்டுவந்தது. அதனால் எனது அப்பா தான் தினமும் என்னை வங்கிக்கு அழைத்து வந்து விட்டுவிட்டு மாலை வங்கிக்கு வந்து என்னை திரும்ப கூட்டி செல்வார். இது குறித்து நான் சேந்தங்கலம் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

(எதிரி தரப்புக்கு குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.)

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**